Teachingninja.in

Latest Govt Job updates

Private Job updates

Free Mock tests available

Visit - teachingninja.in

# TNPSC
# DEO

## Previous Year Paper
### (TET) Paper-I
### 21 Nov, 2023

Teachingninja.in

**DEOMI/23**

Don't write anything in this space

Booklet Serial No. :

Don't write anything in this space

| | | |
|---|---|---|
| தேர்வு | : | மாவட்ட கல்வி அலுவலர் (தொகுதி-IC) பதவிக்கான முதன்மைத் தேர்வு |
| பாடம் | : | கட்டாய தமிழ் மொழி தகுதித் தாள் (பத்தாம் வகுப்புத் தரம்) (தாள் – I) (விரிந்துரைக்கும் வகை) |
| தேர்வு நாள் | : | 21.11.2023 மு.ப. |


| | | |
|---|---|---|
| தேர்வு | : | மாவட்ட கல்வி அலுவலர் (தொகுதி-IC) பதவிக்கான முதன்மைத் தேர்வு |
| பாடம் | : | கட்டாய தமிழ் மொழி தகுதித் தாள் (பத்தாம் வகுப்புத் தரம்) (தாள் – I) (விரிந்துரைக்கும் வகை) |
| தேர்வு நாள் | : | 21.11.2023 மு.ப. |


பதிவு எண் :

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

நான் இந்த வினா விடைத் தொகுப்பை விண்ணப்பதாரரின் பதிவு எண், புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றை நுழைவுச்சீட்டினில் சரிபார்த்த பின் வழங்கினேன்.

அறைக்கண்காணிப்பாளரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

நான் இந்த வினா விடைத் தொகுப்பில் பதில் அளிக்காத விடைப் பகுதிகளை தேர்வு எழுதப் பயன்படுத்திய கருப்பு மை பேனாவினால் குறுக்குக் கோடிட்டுள்ளேன் என உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

Teachingninja.in
Do not use this area
Teachingninja.in

Teachingninja.in

Do not use this area



Teachingninja.in

# தாள் – I

# கட்டாய தமிழ் மொழி தகுதித்தாள்

# (விரிந்துரைக்கும் வகை)

# (பத்தாம் வகுப்புத் தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 32 பக்கங்களைக் கொண்டுள்ளது)

**அறிவுரைகள்**

(கீழ்க்கண்ட அறிவுரைகளை விண்ணப்பதாரர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)

1. தாள்-Iஇல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் 40 பெற்றால் மட்டுமே தாள்-II, தாள்-III, மற்றும் தாள்-IV ஆகியன மதிப்பீடு செய்யப்படும்
2. விண்ணப்பதாரர்கள், இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 32 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். இத்தொகுப்பில் ஏதேனும் குறைபாடிருப்பின், உடனடியாக வேறு தொகுப்பைத் தேர்வுக் கண்காணிப்பாளரிடம் கோரிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
3. இத்தேர்வைப் பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காகத் தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.
4. ஒவ்வொரு வினாவிற்கும் தனித்தனியாக விடை எழுதுவதற்கென இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட கட்டத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.
5. விண்ணப்பதாரர்கள் தங்களது பதிவெண்ணை இத்தொகுப்பில் எந்த இடத்திலும் எழுதக்கூடாது. இந்த அறிவுரையை மீறும் விண்ணப்பதாரர்களுக்கு உரிய தண்டனை விதிக்கப்படும்.
6. விண்ணப்பதாரர்கள் விடையளிக்கும் போது வினா எண்ணையும், அதன் உட்பிரிவையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.
7. விண்ணப்பதாரர்கள் இந்த வினா-விடைத் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.
8. விண்ணப்பதாரர்கள் வினாத்தாளின் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.
9. விண்ணப்பதாரர்கள் கடித வடிவிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது. தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்த வேண்டும்.

   வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், அனுப்புநர், பெறுநர் முகவரிகளில் அ ஆ இ அல்லது எக்ஸ் ஒய் இசட் அல்லது எக்ஸ் எக்ஸ் எக்ஸ் போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுத வேண்டும்.

---



Teachingninja.in

Do not use this area



Teachingninja.in

அலகு — 1 (அ)

*குறிப்பு :* **i)** கொடுக்கப்பட்ட தமிழ்ப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் :

**(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 1 | நூலகம் என்பது நூல்களைக் கற்றலுக்கான களம். ஒவ்வொரு நூலகத்திலும் ஒரு நூலகர் இருப்பார். அவர் நூலகத்தில் அனைத்து நூல்களுக்கும் பொறுப்பாவார். அங்குத் தமிழிலும், ஆங்கிலத்திலும் கதை நூல்கள் இருக்கும். அறிவியல், பொருளியல் மற்றும் வணிகவியல் நூல்களையும் நூலகம் கொண்டிருக்கும். தமிழ் மற்றும் ஆங்கிலச் செய்தித்தாள்களும், இதழ்களும் இருக்கும். நம்மால் அங்கு அவற்றை அனுமதியாகப் படிக்க இயலும். நூல்களை இரு வாரங்களுக்குக் கடனாகப் பெற முடியும். ஒவ்வொருவருக்கும் இது பயனுடையதாகும். |

அலகு — 1 (ஆ)

*குறிப்பு :* **ii)** கொடுக்கப்பட்ட ஆங்கிலப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் தமிழில் மொழிபெயர்க்கவும் :

**(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 2 | The new epoch making era in the history of education was ushered with the attainment of independence in 1947. If brought a new hope a new vision a new future for the Indians. In 1948 Dr. Radhakrishnan Commission was appointed to present a report on University Education. In pursuance of the commissions recommendations, University Grants Commission was constituted to determine the standard of higher education. One of the most important events that have taken place in the field of secondary education was the appointment of Secondary Education Commission in 1952–53. It suggested new organisational patterns improvement in quality of text books curriculam and methods of teaching. An education commission under the Chairmanship of Dr. D.S. Kothari was appointed by the Government of India in 1964. Free and Compulsory primary education for all children upto the age of 14 years and uniform educational structure of 10 + 2 + 3 pattern were its main recommendations. |



Teachingninja.in

## அலகு — 2

*குறிப்பு :* **i)** **கொடுக்கப்பட்ட பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பு தேவையில்லை.**

**(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 3 | இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த 1942-ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் நாள், ஆங்கிலப் படைகள் மலேயாவில் ஜப்பானியரிடம் சரணடைந்தன. இப்படையில் இந்திய வீரர்களும் இருந்தனர். சரணடைந்த அவ்வீரர்களைக் கொண்டு ஜப்பானியர்கள், மோகன்சிங் என்பவரின் தலைமையில் இந்திய தேசிய இராணுவம் (ஐ.என்.ஏ.) என்ற படையை உருவாக்கினர்.<br><br>இந்திய தேசிய இராணுவத்திற்கு மக்கள் ஆதரவு பெருகியது. அக்காலகட்டத்தில் தமிழகத்தில் இருந்து மலேயா, பர்மா போன்ற நாடுகளுக்குப் பிழைப்பிற்காகச் சென்ற தமிழர் பலர் இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்தனர். இந்திய தேசிய இராணுவத்தில் பல பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. அதில் ஒன்று தான் ஒற்றர் படை. ஜப்பானியர்கள் ஒற்றர்படையில் இருந்த வீரர்களை, இந்தியாவில் உள்ள ஆங்கிலேய இராணுவத்தைப் பற்றி ஒற்றறிய நீர்மூழ்கிக்கப்பல் மூலம் கேரளாவிற்கும், குஜராத்திற்கும் அனுப்பினர். சிலரைத் தரைவழியில், பர்மாக் காடுகள் வழியாக இந்தியாவிற்கு அனுப்பினர். இந்திய இராணுவம் அவர்களைக் கைது செய்து சென்னைச் சிறைக்கு அனுப்பியது. பலருக்கு மரண தண்டனை அளித்தது.<br><br>இந்தியாவிற்கு விடுதலை பெற்றுத் தந்ததில் இந்திய தேசிய இராணுவத்தினரின் பங்கினை நாம் மறந்துவிட முடியாது. அவர்கள் தாயக நலனுக்காகத் தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்தனர். |



Teachingninja.in

## அலகு — 3

*குறிப்பு :* **i)** **கொடுக்கப்பட்டுள்ள பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**ii)** **ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்கள்.**

**(5 × 2 = 10)**

| Q.No. | |
|---|---|
| 4 | சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் களி கொடுத்து கவலையைப் போக்குகின்றன. சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணை செய்கின்றன.<br><br>பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்றே கரகாட்டமாகும். ‘கரகம்’ என்னும் பித்தளைச் செம்பையோ, சிறிய குடத்தையோ தலையில் வைத்து தாளத்திற்கு ஏற்ப ஆடுவது, கரகாட்டம். இந்த நடனம் கரகம், கும்பாட்டம் என்றும் அழைக்கப்படுகின்றது. இதற்கு நையாண்டி மேள இசையும், நாதசுவரம், தவில், பம்பை போன்ற இசைக்கருவிகளும் இசைக்கப்படுகின்றன. கரகாட்டம் நிகழ்த்துதலில் இத்தனை பேர்தான் நிகழ்த்த வேண்டும் என்ற வரையறை இல்லை. “நீரற வறியாக் கரகத்து” (புறம் 1) என்னும் புறநானூற்றுப் பாடல் அடியும், சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய குடக்கூத்து என்ற ஆடலும் கரகாட்டத்திற்கு அடிப்படை என்று கருதப்படுகின்றது.<br><br>மயில் வடிவுள்ள கூட்டுக்குள் ஒருவர் தன் உருவத்தை மறைத்துக் கொண்டு நையாண்டி மேளத்திற்கேற்ப ஆடுகின்ற ஆட்டமே மயிலாட்டமாகும். கரகாட்டத்தின் துணையாட்டமாக இருக்கக் கூடிய இந்த மயிலாட்டம் ஊர்ந்து ஆடுதல், மிதந்து ஆடுதல், சுற்றி ஆடுதல், இறகை விரித்தாடுதல், தாவியாடுதல் போன்ற ஆட்ட வகைகளை உள்ளடக்கியுள்ளதாக இருக்கின்றது.<br><br>இரு முனைகளிலும் சம எடைகளைக் கட்டி தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டமாகும். மயிலிறகுக் கற்றைகளை இருபுறமும் பொருத்தி, காவடியை உருவாக்குகின்றனர். காவடியின் அமைப்பிற்கேற்ப பூக்காவடி, மச்சக்காவடி, சர்ப்பக்காவடி, பறவைக்காவடி, தேர்க்காவடி என்று அவற்றை அழைக்கின்றனர். |
| 1. | நிகழ்கலைகளினால் விளையும் நன்மைகள் யாவை ? |
| 2. | கரகாட்டத்தில் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகளைக் குறிப்பிடுக. |
| 3. | காவடியாட்டத்தின் வகைகளைக் குறிப்பிடுக. |
| 4. | தமிழர் கலாச்சாரம் பரவியுள்ள நாடுகள் எவை ? |
| 5. | கரகாட்டத்திற்கு அடிப்படையாகக் கருதப்படுவது எது ? |



Teachingninja.in

## அலகு — 4

*குறிப்பு :* **i)** கொடுக்கப்பட்டுள்ள சுருக்கக் குறிப்புக்களைக் கொண்டு விரிவாக எழுதுக.

**ii)** **300** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 5 | மொழிபெயர்ப்பு – தேவை – கல்வி – இலக்கியம் – செம்மை – பல்துறை வளர்ச்சி – பயன் – மொழி வளர்ச்சி – மொழிபெயர்க்கப்படவேண்டியவை. |

## அலகு — 5

*குறிப்பு :* **i)** திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைதல்.

**ii)** கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

**iii)** **300** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15)**

| | | |
|---|---|---|
| Q.No. 6 | (அ) | வள்ளுவம் வலியுறுத்தும் சமயப்பொறையைச் சான்று காட்டி விளக்குக. |
| | (ஆ) | 'இல்லவள் நல்லவள் ஆனால் வாழ்க்கை சிறக்கும்' – என்பதை வள்ளுவர் வழி நின்று விளக்குக. |
| | (இ) | 'திருவள்ளுவரின் கல்விச் சிந்தனைகள்' – கட்டுரைக்க. |
| | (ஈ) | 'திருக்குறள் போற்றும் பெண்மை' – கட்டுரைக்க. |
| | (உ) | 'வள்ளுவரின் உயிரினக் கோட்பாட்'டை விளக்குக. |

## அலகு — 6

*குறிப்பு :* **i)** கடிதம் வரைதல்

**ii)** கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

**iii)** **250** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15)**

| | | |
|---|---|---|
| Q.No. 7 | (அ) | அரசுக் கல்லூரி ஒன்றில் நடைபெற்ற 'மாபெரும் தமிழ்க் கனவு' நிகழ்வுகள் குறித்து அறிக்கை ஒன்றைத் தயார் செய்து கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுப்புக. |
| | (ஆ) | பூச்சி அருங்காட்சியகம் மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் குறித்த திட்ட மதிப்பீட்டை செய்க. |
| | (இ) | அரசு பள்ளியில் கழிவறை வசதி கோரி கருத்துரு ஒன்று தயார் செய்க. |



Teachingninja.in

## அலகு — 7

*குறிப்பு :* **i)** பின்வரும் ஐந்து பிரிவுகளில், ஒவ்வொரு பிரிவிலும் நான்கு வினாக்கள் உள்ளன.

**ii)** ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**iii)** ஒவ்வொரு பிரிவிற்கும் நான்கு மதிப்பெண்கள்.

**iv)** ஐந்து பிரிவுகளுக்கும் சேர்த்து மொத்தம் இருபது மதிப்பெண்கள்.

**(5 × 4 = 20)**

| Q.No. | |
|---|---|
| Q.No. 8 | **கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** |
| | (1) அமுது |
| | (2) கனவு |
| | (3) நல்லொழுக்கம் |
| | (4) செல்வம் |
| Q.No. 9 | **கீழ்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க** |
| | (1) அழகு – அலகு |
| | (2) அழித்தல் – அளித்தல் |
| | (3) பழி – பலி |
| | (4) தழை – தலை |
| Q.No. 10 | **பிரித்தெழுதுக.** |
| | (1) நீரோட்டம் |
| | (2) என்றுரைக்கும் |
| | (3) எவனொருவன் |
| | (4) முடிவு அதிர |
| Q.No. 11 | **எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக.** |
| | (1) இரவு கடுமையான பனி பொழிந்தது. |
| | (2) நான் நேற்று ஓவியம் வரைந்தேன். |
| | (3) வகுப்பறை மிகவும் சுத்தமாக இருந்தது. |
| | (4) அதைச் செய்தது நான்தான் |



Teachingninja.in

| Q.No. 12 | பிழைநீக்கி எழுதுக : |
|---|---|
| | (1) தமிழ் இலக்கியங்கள் இணிமையானவை. |
| | (2) போர்க்களத்தில் மார்பில் புன்படுவது இயல்பு. |
| | (3) ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிவப்பதிகாரம் |
| | (4) பணிவும் இன்சொல்லுமே ஒருவருக்கு மிகச் சிறந்த அனிகலன்கள் ஆகும். |



Teachingninja.in